செய்தி வெளியீடு எண்:425 நாள் : 26.08.2015

**செய்தி வெளியீடு**

சவூதி அரேபிய சுகாதார அமைச்சகத்தின் அரசு மருத்துவமனைகளில் பணியாற்றுவதற்கு அலோபதி மருத்துவர்களுக்கான நேர்முகத் தேர்வு புதுடில்லியில் 30.8.2015 & 31.8.2015 ஆகிய நாட்களிலும் மற்றும் பெங்களூரில் 2.9.2015 & 3.9.2015 ஆகிய நாட்களிலும் நடைபெற உள்ளது.

இரண்டு வருட பணி அனுபவம் மற்றும் 55 வயதிற்குட்பட்ட கண்சல்ட்ண்டுகள்(Consultants) சிறப்பு மருத்துவர்கள்(Specialists), 45 வயதிற்குட்பட்ட ரெசிடென்ட் மருத்துவர்கள் (எம்பிபிஎஸ் + டிப்ளமோ) விண்ணப்பிக்கத் தகுதியுடையவர் ஆவர்.

தேர்ந்தெடுக்கப்படும் ரெசிடெண்ட் மருத்துவர்களுக்கு குறைந்தபட்ச ஊதியமாக வளருகின்ற நாடுகளில் பட்டம் பெற்று பணி அனுபவத்திற்கேற்ப ரூ.75,000 முதல் ரூ.1.20 இலட்சமும், சிறப்பு மருத்துவர்கள் முன்னேறிய நாடுகளில் பட்டம் பெற்று பணி அனுபவத்திற்கேற்ப ரூ.2.53 இலட்சம் முதல் ரூ.4.20 இலட்சமும், வளரும் நாடுகளில் பட்டம் பெற்று அனுபவத்திற்கேற்ப ரூ.1.52 இலட்சம் முதல் ரூ.2.50 இலட்சமும், கண்சல்டண்ட் மருத்துவர்களுக்கு முன்னேறிய நாடுகளில் பட்டம் பெற்று பணி அனுபவத்திற்கேற்ப ரூ.4.11 இலட்சம் முதல் அதிகபட்சமாக ரூ.6.24 இலட்சம் வரையிலும், வளரும் நாடுகளில் பட்டம் பெற்று பணி அனுபவத்திற்கேற்ப ரூ. 2 இலட்சம் முதல் அதிகபட்சமாக ரூ.3.26 இலட்சமும் ஊதியம் வழங்கப்படும். மேலும், இலவச உணவு, இருப்பிடம், விமான டிக்கெட், குடும்ப விசா மற்றும் சவூதி அரசின் சட்டதிட்டத்திற்குட்பட்ட இதர சலுகைகள் வேலையளிப்போரால் வழங்கப்படும்.

விருப்பமும் தகுதியுமுள்ள மருத்துவர்கள் தங்களின் முழு விவரங்கள் அடங்கிய விண்ணப்பத்தினை ovemcldr@gmail.com என்ற ஈமெயில் முகவரிக்கு உடனடியாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் விவரங்களுக்கு, 044–22502267/22505886/08220634389 என்ற தொலைபேசி மற்றும் கைபேசி எண்கள் மூலமாகவும் அல்லது www.omcmanpower.com என்ற இணையதளத்திலும் தெரிந்து கொள்ளலாம்.

நிர்வாக இயக்குநர்
அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்
சென்னை

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9